## வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு புதிய நிபந்தனை?

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணையும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் திருமலை துறைமுகத்தை சுற்றியுள்ளபகுதிகள் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிலே இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு நிபந்தனையாக இருக்கலாம்என்றும் தெரியவருகிறது.

இலங்கை- இந்திய ஒப்பந்

[4-ம் பக்கம் பார்க்க]

4-4-1991

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர்: 33 பங்குனி 21 றமழான் 18 இதழ்: 53

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 04-04-1991

## பிரயோசனமற்ற பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இலங்கை தமிழர் நிலைபற்றி இலங்கை அரசுடன் தமிழ் குழுக்கள் மேற்கொண்டுவரும் பேச்சுக்கள் பிரயோசன மற்றதாயிருப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இப்பேச்சுக்கள் கடந்த பல மாதங்களாக நடைபெற்று

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா, மன்னாரில் 4 படையினர் பலி!

(வவுனியா)

வவுனியா, மன்னார் பகுதிகளில் தொடர்ந்து இடம் பெற்றுவரும் கடும் மோதலில் நேற்றுமுன்தினம் 4 படையினர் கொல்லப்பட்டனர் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் இடம்பெற்ற மோதலில் ஒரு சிப்பாயும், மன்னாரில் 3 படையினரும் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

★ ஷெல், பீரங்கி, விமான தாக்குதல்

# காரைநகரில் 3-வது நாளாக கடும் மோதல் தொடர்கிறது

## பத்து படையினர் பலி

(யாழ்ப்பாணம்)

**காரைநகர் கடற்படை முகாம் சுற்றுடலில் 3வது நாளாக நேற்றும் கடும் மோதல் இடம்பெற்றது. புலிகளின் தாக்குதலில் 10க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டும், ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.**

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் நீலங்காடு, சீ-நோர் காவலரண்களில் இருந்து சிறிலங்காப் படையினர் முன்னேற முற்பட்டபோது, புலிகள் சுற்றிவளைத்து உக்கிரமான தாக்குதலை மேற்கொண்டதில் 10 படையினர் வரை கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவர்களது ஆயுதங்களும் மீட்கப்பட்டதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த திங்கள் இரவு இம் மோதல்ஆரம்பமானது. வெளி

(4-ம் பக்கம் பார்க்க)

## அகோர விமான ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கடற்படை முகாமை அண்டிய பகுதியில் நேற்று காலை முதல் மாலை வரை 'வை ரக சிறிய விமானமொன்று இரு தடவைகளாக 12 குண்டுகளை வீசித்தள்ளியது. கடற்படை முகாம், சீ-நோர் காவலரணி

[4-ம் பக்கம் பார்க்க]

## மட்டு. வன்னியில் தாக்குதல் படைகள் முகாம் திரும்பின

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களில் படையினர் மீது புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதல்களினால் பலத்த இழப்புகளுடன் தமது முகாம் திரும்பியுள்ளனர்.

மட்டக்களப்பு வெள்ளாவெளி முகாமிலிருந்து கோயில்

(4ம் பக்கம் பார்க்க)

## திருமலை சம்பூரில் 11 சடலங்கள் மீட்பு

(திருமலை)

திருமலை சம்பூர் பகுதியிலிருந்து 11 சடலங்கள் மீட்கப் பட்டுள்ளது. சடலங்கள் இது வரை அடையாளம் காணப் படவில்லையாம்.

சிங்கள மீனவர்களது சடலங்களே இவையென அரசு தரப்பில் கூறப்பட்டுள்ள போதும் அது ஊர்ஜிதப்படுத்தப்படவில்லையென்றும் கூறப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## எழுச்சி வீழ்ச்சியுடன் செல்லும் இலங்கை உள்நாட்டு யுத்தம்

('வாஷிங்டன்)

இலங்கையில் கடந்த 7 வருடங்களாக இடம்பெற்றுவரும் உள்நாட்டு யுத்தம் இரு தரப்பிற்கும் ஓர் எழுச்சியையும், வீழ்ச்சியையும் ஏற்படுத்திவருவதாக அமெரிக்க பிரபல சஞ்சிகையான 'நியூஸ் வீக்' தெரிவித்துள்ளது.

போராளிகளுக்கு பல இடங்களில் வெற்றி கிடைப்பதும் பின் அதில் ஒரு தேக்கம் ஏற்பட்டு, பின் அது மாறுவதுமானதொரு நிலையிலேயே இந்தப் போர் சென்றுகொண்டிருக்கிறது.

உள்நாட்டுப்போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பும் ஒருவரில் ஒருவர் நம்பிக்கை வைப்பது மிகமிகக் குறைந்தளவாகவே உள்ளது. நம்பிக்கைகொள்வார்களேயானால் அமைதிக்கு ஒரு சந்தர்ப்பமளிக்கப்படலாமென்றும் 'நியூஸ் வீக்' குறிப்பிட்டுள்ளது

(4-ம் பக்கம் பார்க்க)

## 10,000 ஷெல், மோட்டர் கப்பலிலிருந்து மீட்பு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டுக் கப்பல் ஒன்றிலிருந்து பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மோட்டார் ஷெல் குண்டுகளும், ரொக்கட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த இரு வாரத்திற்கு முன் கொழும்புத் துறைமுகம் வந்த இக்கப்பல் கப்டன் உட்பட ஆறு பேர் தடுப்புக்காவலில்வைக்கப்படடு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இந்த ஆயுதங்கள் எவருக்கு வந்தது என்பது பற்றியே தற்போது விசாரணை நடைபெற்று வருகிறதாம். [வி]

## தமிழ் குழுக்களிடையே கருத்து முரண்பாடு

(கொழும்பு)

கொழும்பில் இயங்கி வரும் தமிழ் குழுக்களிடையே கருத்து முரண்பாடு வலுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 31-ம்திகதி இலங்கை

(4-ம் பக்கம் மார்க்க)

## தமிழீழ மீட்பு நிதிக்கு நகை வரி நீக்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதிக்கு தமிழீழ மக்கள் பங்களிப்புச் செய்து வருவதால் எம்மால் ஒரு பவுணுக்கு நூறு ரூபா என்ற அடிப்படையில் அறவிடப்பட்ட வரி அறவீடு நீக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் நிதிப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் எவரும் நகை கொள்வனவு செய்யும்போது மேற்படி வரியைச் செலுத்த வேண்டாமென வேண்டுகின்றோம்.

[4-ம் பக்கம் பார்க்க)

பாரெல்லாம் தமிழ் முழங்க ஊரெல்லாம் மணங்கமழும்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கலை, கலாசார பிரிவு நடத்தும்

★ மாபெரும் முத்தமிழ் விழா ★

1991 - 04 - 06 ——→ 1991 - 04 - 15

# வரி விளம்பரம்


### பாலாஜி புத்தகசாலை

ஸ்ரீ சத்திய சாயிபாபா படம் (லெமனர் 3½ X 2½ சைஸ்) விலை ரூபா 2-50. பாடசாலை புத்தக உபகரணங்கள், ஈழத்து எழுத்தாளர்களின் நாவல்கள். மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம், 15/6, முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-4519)

### நாவல்கள் (இலவசம்)

வித்தியாசமான கதைகளில் கருத்தில் சிறந்த நாவல்கள் - மீரா வெளியீடுகள். 140/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கான புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம். திருக்கணிதம், சாவகச்சேரி. யாழ்ப்பாணத்தில் மீரா வெளியீடுகளை விற்பனை செய்யும் புத்தகசாலைகளில் பெறலாம். (சி-4521)

### வகுப்பு

கொம்பியூட்டர் Basic, S.L E·A.S., தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும், I. A. B, வகுப்புகள் 6-4-91ல் ஆரம்பமாகின்றன. School of Business Administration 16, 3வது குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி-4605)

### தேவை

அரைப்போத்தல் திரவங் கொள்ளக்கூடிய சுத்தமான போத்தல்கள் வாங்கப்படும். சிறிய தொகையாக இருந்தாலும் பரவாயில்லை. மில்க் வைற், யாழ்ப்பாணம். (சி-1206)


# தரம்உயர்ந்த அதிபர்களுக்கு பாடசாலை வழங்கப்படவில்லை

(மாங்குளம்)

முல்லைத்தீவில்தரம் உயர்ந்த அதிபர்களுக்கான பாடசாலைகள் இன்னமும் வழங்கப்படாததால் அதிபர்கள் வட்டாரங்கள் கவலையடைந்துள்ளனர்.

தரம் உயர்ந்த அதிபர்களுக்கான பாடசாலைகளில் வெற்றிடங்கள் நீண்ட காலமாக இருந்துவரும் வேளையில் மேற்படி அதிபர்கள்தரம் குறைந்த பாடசாலைகளிலேயே பணிபுரிந்து வருவதாகவும், யாழ். மாவட்டத்தில் தரம் உயர்ந்த அதிபர்களுக்கான பாடசாலைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவை மேலும் தெரிவித்தனர்.

# இடம்பெயர்ந்தோர் போதிய நிவாரணமின்றி பாதிப்பு

(காங்கேசன்துறை)

இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்கள் அரச நிவாரணத்தில் பெரிதும் புறக்கணிக்கப்படுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

வலி. வடக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் ஜூன் 1990ல் இடம்பெயர்ந்த குடும்பகளே கடந்த 10 மாதங்களில் சகலருக்குமான நிவாரணத்தைவிட 5 தடவைகள் மட்டுமே நிவாரணத்தை பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொழில் வருமானம் உடைமைகள் போன்றவற்றை இழந்து அகதிகளாக வெளியேறி உறவினர் வீடுகளில் தங்கியுள்ள இக் குடும்பங்கள் போதிய நிவாரணம் கிடைக்காமையால் பெரிதும் கஷ்டமுறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்தோர் சார்பில் யாழ். அரச அதிபரிடமும்

[4-ம் பக்கம் பார்க்க]

## யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு 1லீற்றர் ரூ.10வீதம் மண்ணெண்ணை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனு வைத்தியசாலையில் கடமைபுரியும் சகல ஊழியர்களுக்கும் அரசினுல் குமண கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணை ஒரு லீற்றர் 10 ரூபா வீதம் ஒருவருக்கு 3 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது.

850 ஊழியர் இதனை பெற உள்ளனர். (56)

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்/வைத்தீஸ்வர வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் அதிபர் சி. சிவசரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகதெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்: திரு. சி. சிவசரவணபவன் (அதிபர்) செயலாளர்: திரு. தி. லோகநாதன், பொருளாளர்: திரு. எம். தனபாலசிங்கம். நிர்வாககுழு உறுப்பினர்கள்: திருவாளர்கள்; சி. சோ. ஜீவரட்ணம், என். மயில்வாகனம், எம். சுரேந்திரா, ஏ. சிவமூர்த்தி எஸ். நடேஸ்வரன், எம். ஜெகதீசன். எம். விஜயராஜன், எல். பகீர்சாமி, எஸ். சந்திரபோஸ், எஸ். பாலசிங்கம், வி. வெங்கடாசலஐயர், கே. பஞ்சரட்ணம், ரி. சந்தோசம், என். வன்னியசிங்கம், யூ. கஜேந்திரன், எஸ். பாலசிங்கம், எஸ். கே. சண்முகலிங்கம், திருமதி எஸ். தேவராஜன்.

## முத்தமிழ்விழா நிகழ்ச்சிகள்

யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இம்மாதம் 6ம் திகதி முதல் 15ம் திகதி வரை தினமும் பிற்பகல் 2 மணி தொடக்கம் 6 மணிவரை ஓவியக் கண்காட்சி நடைபெறும்.

விழா நிகழ்ச்சிகள் பத்து நாட்களும் 60க்கு மேற்பட்ட அரங்குகளில் நடைபெறும்.

சாவகச்சேரியில் 11ம் திகதி நடைபெறும் நிகழ்ச்சியில் மாவீரர் தினத்தில் நடைபெற்ற கலை, கலாச்சார போட்டிகளின் பரிசுகள் வழங்கப்படும். 13ம் திகதி நெல்லியடியில் நடைபெறும் நிகழ்ச்சியில் முத்தமிழ் விழா மலர் வெளியிடப்படும். 15ம் திகதி நிகழ்ச்சியில் தமிழீழ தேசிய விருதுவழங்கப்படும்.


வெ/செட்டிகுளம் ப. நோ. கூ. சங்கம்

## பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்

கீழ்க்காணப்படும் தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடம் இருந்து மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள், தலைவர் வெ/செட்டிகுளம் ப. நோ. கூ. சங்கம் குருக்கள் புதுக்குளம் என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரிலோ, அனுப்பப்படல் வேண்டும்.

(1) விண்ணப்பத்தாரியின் முழுப்பெயர்;
(2) பிறந்த திகதி;
(3) நிரந்தர விலாசம்:
(4) கல்வித்தகைமைகள்;
(5) தற்போது வதியும் மாவட்டம்;
(6) மாவட்டத்தில் வசித்த காலம்;
(7) அண்மையில் பெறப்பட்ட இரண்டு சான்றிதழ்கள்
(அவ்வப்பகுதி கி. சே. அலுவலரின் சான்றிதழ் இணைக்கப்படவேண்டும்.)

**கல்வித்தகைமைகள் :**

கூட்டுறவுப்பணியாளர் 7வது சம்பளத்திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வைத்தரத்தில் மூன்று வருடங்கள் கடமையாற்றிய அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் எட்டாவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பர்வைத்தரத்தில் ஆறு வருடங்கள் கடமையாற்றய அனுபவம்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட பட்டம் அல்லது சமமான தகுதிகளுடன் நான்கு வருடங்களுக்குக் குறையாத முகாமைத்துவ அனுபவம் (அங்கீகரிரகப்பட்ட வர்த்தக நிறுவனத்தில்/கைத்தொழில் நிறுவனத்தில்) பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் (உ/தரம்) தராதரப் பத்திரம் அல்லது க. பொ. த. (உ/தரம்) உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தி அடைந்திருப்பதோடு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம்/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத முகாமைத்துவ அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத் திட்டம்:

$$\frac{1305 - 2370}{60x4 - 75x11}$$ மற்றும் படிகளும்

1991 ஏப்பிரல் 21-ம் திகதி 40 வயதுக்கு மேற்படாத விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வவுனியா மாவட்டத்தில் வதிபவர்களுக்கும் தற்பொழுது கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிபவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

எல். சி. லெப்பேட்,
தலைவர்,
பல நோ. கூ. சங்கம்,
செட்டிகுளம் குருக்கள் புதுக்குளம்.

(ஏ-1201)


## இராசி பலன்

04·04·1991
வியாழக்கிழமை

பஞ்சமி மாலை 6.09 வரை; அனுஷம் மு. ப. 10.02 வரை, சித்தயோகம் இராகுகாலம் 1.40 முதல் 3.40 வரை, சுபநேரம் காலை 7.40 முதல் 9 10 வரை.

மேடம்: மனக்குழப்பம், பணியாள் தொல்லை, தொழில் பாதிப்பு. கவலை.

இடபம்: வீட்டில் மகிழ்ச்சியான சம்பவம், அந்நியர்உதவி பணவரவு,

மிதுனம்: கண்ணியக் குறைவு, தொழில்லாபம், கல்விமான் சந்திப்பு.

கடகம்: குடும்பப்பிரிவு அதிகாரிகள் சினம், கடன்சுமை.

சிங்கம்: வைத்தியச் செலவு காரியதாமதம், பயணங்களால் அலைச்சல்.

கன்னி; தொழில் கஷ்டம் வீண்குரோதம் வாக்கு கலகம்.

துலாம்: பயனற்ற முயற்சி விரோதம் தொழில்கஷ்டம், குடும்பப்பிரிவு.

விருச்சிகம்; குடும்பமகிழ்ச்சி தாயன்பு, இனசன உதவி, பணவரவு

தனுசு: தடுமாற்றம்குடும்ப விரோதம், காரியத்தடை,

மகரம்: தொழில் போட்டி காரியதாமதம், குடும்பகஷ்டம்

கும்பம்: சகோதரர் பகை, அந்நியவாசம், கண்ணில் ரோகம்.

மீனம்: ஞானிகள் உபதேசம், தொழில் விரோதம், பாதுகாப்பின்மை.

— ஜோஸ்யர்

## மின்னல் தாக்கி நால்வர் பலி

(சென்னை)

தமிழ்நாடு திருநெல்வேலிப் பகுதியில் மின்னல் தாக்கியதில் நால்வர் மரணமானுர்கள்.

நேற்று முன்தினம் பகல் பகல் 11 மணியளவில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த மூன்று விவசாயிகளும், வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த ஒரு பெண்ணும் திடீரென ஏற்பட்ட மின்னலால்தாக்குண்டு மரணமானதாககூறப்படுகின்றது. (வி)


## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



மனுவல் ஞானப்பிரகாசம்
(நடராசா)

தோற்றம் : 12 - 02 - 1928
மறைவு : 04 - 04 - 1990

'அண்டி வந்தேன் அடைக்கலம் நீ
ஆதரித்தே அரவணைப்பாய்'

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 4-4-91 வியாழக்கிழமை காலை 6-00 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், நண்பர்கள்.

இல: 13, 3ம் குறுக்கு வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.

(சி-4609)

# கிளிநொச்சிக்கு 1000 மெற்றிக் தொன் உரம் தருவிக்கப்பட்டுள்ளது

**— அரச அதிபர்**

(கே. வி. கே. திருலோக மூர்த்தி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கைக்கு தேவையான உரத்தை தருவிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வலைப்பாடுதுறைமுகம் ஊடாக ஆயிரம் மெற்றிக் தொன் அமோனியா உரம் தருவிக்கப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் ஈழநாட்டுக்களித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த காலபோக வேளாண்மையின் போது உரத்திற்கு நிலவிய தட்டுப்பாட்டாலும் அதிகவிலை ஏற்றத்தாலும் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சொல்லொணாத்துயரத்தை அடைந்ததுடன் எதிர்பார்த்த அறுவடையையும் அடையவில்லை. இந்த நிலையில் நெல்லின் விலையும் வீழ்ச்சிகண்டுள்ளது.

இவ்வாறான நிலை தொடருமானால் முற்றுமுழுதான விவசாயப் பிரதேசம் பாதிப்படைந்து விவசாயத்தை கைவிடும் விரக்தி நிலைக்கு விவசாயி தள்ளப்படுவான் எனவே தான் சிறுபோக வேளாண்மையில் உயர்வை விவசாயிகள் எட்ட வேண்டும் என்ற நோக்கில் பல சிரமங்களின் மத்தியில் உரத்தை தருவிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். யூரியா உரம் கொண்டுவர அனுமதிக்கப்படவில்லை பீ-1 மிக்சர் உரத்தையும் தருவிக்க திட்டமிட்டுள்ளேன்.

இம்முறை இரணைமடுக்குளத்தில் சிறுபோக நெற்செய்கைக்கு தேவையான தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. எனவே உருத்திரபுரம் முதலான தூர இடம்வரை தண்ணீர் வழங்கப்படவுள்ளது. அத்துடன் ஏக்கர் கணக்கும் நெற்செய்கைக்கு கூட்டப்பட்டுள்ளது என்றார். (83)

புறக்கோட்டைக் கடையில்

# ரூ. 15லட்சம் தங்கக் கட்டிகள் மீட்பு!

கொழும்பு)

புறக்கோட்டையிலுள்ள ஒரு கடையைப் பொலிஸார் முற்றுகையிட்டு 15 லட்சம் ரூபா பெறுமதியான தங்கக்கட்டிகளைக் கைப்பற்றினர்.

இக்கடை உரிமையாளரின் நடவடிக்கையை பல நாட்களாக அவதானித்துவந்த பொலிஸார், கடைக்காரர் மீது சந்தேகங்கொண்டு அவ்விடத்தைச் சோதனை செய்தனர். அப்போது கடைக்காரர் அனுமதியின்றி வைத்திருந்த தங்கக்கட்டிகள் வெளிவந்தன. அவற்றுடன் உரிமையாளரையும் கைது செய்தனர். (பூ)

## 50 லட்சம் ரூபா அன்பளிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அடுத்தவருட ஆரம்பத்தில் நடைபெறவிருக்குப் 'தெற்காசிய சம்மேளன விளையாட்டுப் போட்டி'களுக்கென இலங்கை வங்கி 50 லட்சம் ரூபாவை விளையாட்டுத்துறை அமைச்சரிடம் நேற்று முன்தினம் வழங்கியது. (வி)

# 6 தும்புத் தொழிற்சாலைகள் யாழ். குடாவில் இயங்குகிறது

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் சிறுகைத்தொழில் திணைக்களத்தால் ஆறு தும்புத் தொழிற்சாலைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

சங்கானை, அராலி, மல்லாகம், கரவெட்டி மீசாலை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் இந்த ஆறு தும்புத் தொழிற்சாலைகளும் இயங்குகின்றன.

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தலா பத்து பயிற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

தும்புத்தடி, இழைக்கயிறு, கால்மிதி, தேடாவளையகயிறு ஆகியவை இங்கே உற்பத்தி செய்யப்படுகிறது.

தும்புத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அந்தந்தப் பகுதிகளிலுள்ள ப. நோ. கூ. சங்கங்கள்மூலம்விற்பனைக்குவிடப்படுகின்றன. (153)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 4-ம் திகதி வியாழக்கிழமை காலை கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி தியாகராசா முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்கிறார். (153)


வளமான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி

"ஷப்ரு"

உங்கள் நிதி வளத்தைப் பெருக்க
எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்

நிலையான வைப்பு

| காலம் – மாதம் | மாதாந்தம் | முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | — | 17% |
| 06 | — | 18% |
| 12 | 18% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

கடந்த மூன்று ஆண்டுகளுக்கான நிதி நிலை விவரம்

| | 1986/87 (ரூபா) | 1987/88 (ரூபா) | 1988/89 (ரூபா) |
|---|---|---|---|
| மூலதனமும் மொத்த ஒதுக்கமும் | 11, 342, 354 | 14, 354, 927 | 23, 306, 910 |
| பொதுமக்கள் வைப்புகள் | 100, 577, 492 | 110, 897, 760 | 116, 890, 354 |
| வங்கிக் கடன்கள் | 7, 718, 284 | 6, 539, 639 | 11, 364. 064 |
| அரச வங்கியிலான நிலையான வைப்புகளும் மத்திய வங்கி உண்டியல்களும் | 16, 613, 250 | 14, 832, 400 | 13, 700, 000 |
| வங்கி மீதிகள் | 10, 911, 712 | 3, 189, 064 | 1, 894, 245 |
| மொத்தச் சொத்துகள் | 127, 175, 677 | 143, 822, 862, | 162, 239, 787 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் இலாபம் | 19, 310, 887 | 23, 173, 830 | 23, 700, 680 |
| வைப்பாளருக்குச் செலுத்திய வட்டி | 16, 880, 875 | 20, 025, 480 | 20, 833, 024 |
| வரி செலுத்தியபின் தேறிய லாபம் | 2, 330, 012, | 3, 148, 350 | 2, 867, 656 |
| பகிரப்பட்ட இலாபம் | — | 1, 775, 100 | 1, 506, 110 |

1988ஆம் ஆண்டு 78ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் பதிவு செய்யப்பட்டது.
பதிவு இல. NBS/R/90/021

பணிப்பாளர் சபை

எஸ். பி. ஈ. கருணாரட்ன
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
எஸ். பாலசுப்பிரமணியம்,
A I. B. (Lond ), முகாமைப் பணிப்பாளர்
ஜே டி. நவரட்ணம்
A, I. B. (Lond.), பொதுமுகாமையாளர்
ஏ. எம். எச். பாரி
B. A. (Hons)
ஆர். பாலசுப்பிரமணியம்

மேலதிக விபரங்களைப் பெற

ஷப்ரு
யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,
61, நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு - 4.
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(A-1142)


சனசமூக நிலையங்களுக்கு

# கடன் அடிப்படையில் அலுமாரி வழங்கல்

[வேலணை]

யாழ். குடாநாட்டிலுள்ள சனசமூக நிலையங்களால் நடாத்தப்பட்டுவரும் நூல் நிலையங்களுக்கு நூல்களை பாதுகாப்பாக வைத்து பராமரித்து வருவதற்காக கடனடிப்படையில் அலுமாரிகள் யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சு. டிவகலாலா அவர்களால் வழங்கப்பட்டு வருகின்றது

இவ்வாறு வழங்கப்படும் அலுமாரிகளைப் பெறவிரும்பும் சனசமூக நிலையங்கள் தத்தமது நிலையத்தின் கடிதத்தலைப்பில் நூல் நிலையம் இருக்கின்றதென்பதை உறுதிசெய்யப்பட்ட சிபார்சு கடிதத்துடன் யாழ் கச்சேரியிலுள்ள உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு சென்று இவற்றைப் பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. (75)

# அ. தி. மு. க. கட்சிச் சின்ன வழக்கு தள்ளுபடி

(சென்னை)

அ. தி. மு. க, ஜெயலலிதா பிரிவிலிருந்து பிரிந்த முன்னாள் தமிழ்நாட்டுச் சட்டசபை சபாநாயகர் திரு. பி. எச் பாண்டியன் கட்சி சின்னம் சம்பந்தமாக நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு நேற்று முன்தினம் தள்ளுபடி செய்யப்பட்டது

அ. தி. மு. க. வின் சின்னமான ''இரட்டை இலை'' தமது கட்சிக்கே உரித்தானது ஜெயலலிதா கட்சிக்கு அல்ல என்று திரு. பாண்டியன் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கை சென்னை நீதிமன்றம் தள்ளுபடி செய்து இச்சின்னம் ஜெயலலிதா கட்சிக்கே உரித்தானது என்று தீர்ப்பளித்தது (வ)

# கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்

(நீர்கொழும்பு)

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 1 லட்சத்து 10 ஆயிரம் மீனவர்கள் பயனடையவுள்ளனர்.

18 வயதிலிருந்து 60 வயதுக்குட்பட்டவர்கள் இதில் சேர்த்துகொள்ள முடியும்.

ஆரம்ப நடவடிக்கையாக நீர்கொழும்பில் பல கடற்றொழிலாளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு அவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (பூ)

# கைதடி, நாவற்குழியில் பாணின் விலை ரூ.9

[நாவற்குழி)

கைதடி நாவற்குழிப் பிரதேசத்தில் உள்ள சகல கடைகளிலும் பாண் 9.00 ரூபாவிற்கு விற்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாணின் விலை 9-00 ரூபா என்று எழுதப்பட்ட விலைப் பட்டியல் கடை வாசலில் தொங்கவிடப்பட வேண்டும். என்றும் தவறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கைதடி நாவற்குழிப் பிரதேசப் பொறுப்பாளர் தெரிவித்தார்

இப்பிரதேசத்திற்குள் இருக்கும் பேக்கரிகளிலும் 350 கிராமிற்கு குறையாத பாண் 8 50 சதமாக வழங்கப்பட வேண்டும் எனவும் அறிவித்துள்ளார். (107)

# தமிழக ரயில் பாதைகளில் ஆயுதம் தரித்த காவலர்கள்

(சென்னை)

சென்னைக்கும் திருச்சிக்கும் இடையே செல்லும் சகல புகையிரதங்களிலும் ஆயுதம் தரித்த பொலிசார் கடமையிலீடுபடுவார்கள்.

அத்துடன் சகல புகையிரதப் பாலங்களிலும் ஆயுதம் தரித்த காவலர்களும் கடமை புரிந்துவருகிறார்கள்.

கடந்த சில நாட்களாக புகையிரதப் பாதைகளில் பாறாங்கல், பெரிய மரக்குற்றிகள் போடப்பட்டு சதி நாச வேலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் இப்பாதையில் போடப்பட்டிருந்த இரு பெரிய பாறாங்கல்லுகளால் ரயில் ஒன்று பலத்த சேதமடைந்ததுடன் தடம்புரளும் ஒரு நிலையிலிருந்து தப்பித் கொண்டது. (பூ)

# வெளிநாட்டு முகவர் கொழும்பில் கைது

(கொழும்பு)

போலி விசாக்களுடன், தமிழ் இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் வெளிநாட்டு ஏஜென்ஸி முகவர் ஒருவர் நேற்று முன்தினம் கட்டுநாயக்காவில் வைத்து விமானநிலைய அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

இவர் பல தடவைகள் இது போன்ற முயற்சிகளில் ஈடுபட்டுவந்ததாகவும், இது சம்பந்தமாக அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

மேற்படி நபர் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், இவர் மீது விரைவில் வழக்குத் தாக்கல்செய்யப்படுமென்றும் பொலிஸார் தெரிவித்தனர். (க)

# 29 தமிழ் இளைஞர்கள் கொழும்பில் விடுதலை

(கொழும்பு)

தெமட்டகொட, மருதானையில் வைத்துக் கைது செய்யப்பட்ட 29 தமிழ் இளைஞர்களும் கடந்த திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டார்கள்.

மேற்படி தமிழ் இளைஞர்கள் சந்தேகத்திற்கிடமான முறையில் விடுதி ஒன்றில் தங்கியிருப்பதாக பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (க)

## திருமலை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கடந்த பல மாதங்களாக திருமலை மாவட்டத்தில் பல தமிழர்கள் கொல்லப்பட்டு, அவர்களது சடலங்கள் வீதியோரங்களில் போடப்படுவதும் தெரிந்ததே. (சி)

## வவுனியா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வித்தன.

இம்மாவட்டங்களில் தற்போது கடும் யுத்தம் நடைபெற்றுவருவதாக பி. பி. சி தெரிவித்தது. [சி]

## சுக்ளா கட்சி மாறினார்

(புதுடில்லி)

ஜனதா தள் (எஸ்) தலைவரும், முன்னாள் வெளியுறவு அமைச்சருமான திரு வித்யா சரண் சுக்ளா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துள்ளார்.

சமயசார்பற்ற மற்றும் ஜனநாயக முறையை வலுப்படுத்துவதற்காக நிபந்தனையற்ற முறையில் காங்கிரஸ்கட்சியில் சேர்ந்துள்ளதாகச் செய்தியாளர் மத்தியில் திரு. சுக்ளா இதனைத் தெரிவித்தார். (பூ)

# யாழ். புறப்பட்டவர் கதி தெரியவில்லை

(யாழ்ப்பாணம்)

அப்புத்தளையிலிருந்துகடந்த மாதம் 15ம் திகதி யாழ். நகர் நோக்கிவந்த தமது சகோதரர் இன்னும் வீடுவந்து சேரவில்லை அவருக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்து கூறும்படி யாழ்வாசி ஒருவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறையிட்டுள்ளார்.

அப்புத்தளை இலங்கை வங்கியில் வேலைசெய்யும் தனது சகோதரர் கடந்த மாதம் 15ம் திகதி அங்கிருந்து யாழ். நகருக்கு புறப்பட்டுவிட்டார் என்று அறிந்தோம். ஆனால், அவர் இன்னும் வீடுவந்துசேரவில்லை என அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (வி)

# தனியார் ஊழியருக்கும் 300 ரூபா மேலதிகபடி

(கொழும்பு)

அரசாங்க ஊழியருக்கு வழங்கப்படும் 300 ரூபா மேலதிகப் படியைப் போன்று நாட்டிலுள்ள தனியார் நிறுவனங்களில் தொழில்புரியும் ஊழியருக்கும் வழங்குமாறு அரசு அறிவித்துள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதத்திலிருந்து 300 ரூபா மேலதிகப் படியை அரச ஊழியர்களும், ஓய்வூதியரும் இதுவரை பெற்றுவருகின்றனர்.

இத்திட்டத்தினால் நாட்டில் உள்ள 6 லட்சம் தனியார் துறை ஊழியர் பயனடைவர் என அரசு தெரிவித்துள்ளது. (பூ)

# "வயதானவர்களும் ஆயுதம் ஏந்தலாம்"

(நாவற்குழி)

மாவீரர்கள் பெயரில் இல்லங்கள் அமைத்து சாவகச்சேரி றே. க. த. க பாடசாலையில் விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டது. மாவீரர்களான லெப். மரியதாஸ், லெப். றேகா ஆகியோர் பெயரிலேயே இல்லங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

மேற்படி போட்டியில் சிறப்பு நிகழ்ச்சியாகத் திருமணமானவர்களுக்கும், திருமணமாகாதவர்களுக்குமிடையில் கயிறிழுத்தல் போட்டி நடைபெற்றபோது திருமணமானவர்கள் வெற்றிபெற்றனர்.

இதனை ஆதாரம் காட்டி இப்போட்டியில் பரிசு வழங்கிப் பேசிய தென்மராட்சி மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. ரஞ்சன், "வயதானவர்கள் கூட ஆயுதம் ஏந்தலாம், போராட்டத்தில் ஈடுபடலாம். அவர்கள் தமிழீழத்தினை ஆக்க தமது பூரண ஒத்துழைப்பை வழங்கலாம்" என்று குறிப்பிட்டார்.

இப்போட்டிக்கு மாணவர் இயக்கம் ஒரு வெற்றிக்கேடயத்தையும் வழங்கியது. (1[illegible]7)

# பொலிஸ்வேடத்தில் கொள்ளை தமிழ் கோஷ்டி பிடிபட்டது

(கொழும்பு)

பொலிஸார் போல் வேஷம் போட்டு, வீடுகளை சோதனையிட்டு கொள்ளையடித்துவந்த தமிழ் இளைஞர் கோஷ்டி ஒன்று கொழும்பில் உண்மையான பொலிசாரிடம் வசமாக மாட்டிக்கொண்டது.

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, இரத்மலானை பகுதிகளில் உள்ள தமிழர்களுடைய வீடுகளில், பொலிசார்போல் வேஷமிட்டு வீடுகளை திடீர் சோதனையிடுவது போல் நடித்து நகைகளையும், பணத்தையும் பெருமளவு கொள்ளையடித்து வந்த தமிழ் இளைஞர் கோஷ்டியொன்றை நேற்று முன்தினம் பகல் 11-30 மணியளவில் வெள்ளவத்தையில் வைத்து பொலிசார் மடக்கிப் பிடித்தனர்.

பல நாட்களாக பொலிசார் போல் நாடகமாடிய இந்த இளைஞர் கோஷ்டியிடமிருந்து பொருந்தொகையான பணமும், நகைகளும், பொறுமதி வாய்ந்த வெளிநாட்டுப் பொருட்களையும் பொலிசார் ஒரு வீட்டிலிருந்து மீட்டனராம். (வி)

# தமிழக தேர்தலில் மூப்பனார் போட்டியிடார்

(சென்னை)

தமிழ்நாடு காங்கிரஸ் (ஐ) தலைவர் திரு. கருப்பையா மூப்பனார் தாம் எதிர்வரும் சட்டசபை தேர்தலில் போட்டியிடப்போவதில்லையென அறிவித்துள்ளார். ஆனால் கட்சியின் வெற்றிக்கு பாடுபடப்போதாகவும் கூறினார்.

அ. தி. மு. வுக்கும், காங்கிரஸ் கட்சிக்குமிடையே தேர்தல் தொகுதி ஒதுக்கீட்டில் எந்தவித சிக்கலும் இல்லை என்றும் அவர் மேலும் கூறினார். (பூ)

## இடம்பெயர்ந்தோர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் உயர் அதிகாரிகளிடமும் வலி. வடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கம் மகஜர்கள் சமர்ப்பித்தும் எவ்வித பயனும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (86)

## தந்தை செல்வா நினைவுஸ்தூபியில் மலர் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 94-ஆவது பிறந்த தினத்தன்று யாழ். கோட்டையிலுள்ள செல்வா நினைவு ஸ்தூபியில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது

திருவாளர்கள் ஆர். சதாசிவம், சா. ஆ தர்மரத்தினம் ஆகியோர் கூட்டாக மலர் வைத்து அஞ்சலி செலுத்தினர். (153)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு மருதனைமடம் கல்விக்கோட்ட உபவள நிலையத் திறப்புவிழா இன்று 4-ம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மருதனைமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. (153)

## பலாலியில் மோதல்

[யாழ்ப்பாணம்]

பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியே வர முற்பட்ட இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் ஏற்பட்டது.

விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் இராணுவத்தினர் சேதங்களுடன் மீண்டும் முகாமிற்குச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகின்றது. [வி]

## தமிழ் குழுக்களிடையே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் பிரச்சனை தொடர்பாக லண்டனில் ஈ என் டி எல் எவ் கூட்டிய மாநாடொன்றுக்கு சில தமிழ் குழுக்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையாம்.

முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சுக்கள் இடம்பெற்று வந்தபோது இந்த கருத்து முரண்பாடு ஆரம்பித்து தற்போது அது சூடுபிடித்து வருவதாகவும் கூறப்படுகிறது. (சி)

## தமிழீழ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நகை வியாபாரிகள் எவரும் வரி நீக்கத்தை கருத்தில் கொண்டு நகை கொள்வனவாளரிடம் வரி அறவிடக்கூடாதெனக் கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அகோர

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

லிருந்து அகோர ஷெல் தாக்குதலும் இடம்பெற்றது.

இக்குண்டுகள் கருங்காலி. வியாவில், பலகாடு, களபூமி. வளானை சந்திக்கப்பால் வீழ்ந்து வெடித்ததில் சில வீடுகளும், கடைகளும் பலத்த சேதமடைந்ததாகத் தெரிய வந்துள்ளது.

10-45 மணிமுதல் 2-30 மணி வரை 'வை' ரக விமானம் 12 குண்டுகளை வீசியது 2-45மணி முதல் 30க்கும் மேற்பட்ட ஷெல்கள் தொடர்ச்சியாக ஏவப்பட்டன. இதே வேளை ஹெலியிலிருந்து கலிபர் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று அதிகாலையும் முகாமிலிருந்து களபூமி, கேசடை, கருங்காலி பலகாடு நோக்கிப் பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கோவளம், வேரப்பிட்டி, நீலங்காடு கடல் பகுதியில் இருந்து இடையிடையே பீரங்கித் தாக்குதலும் நடத்தப்பட்டது.

இச்செய்தி அச்சுக்குப் போகும்போது நள்ளிரவும் ஷெல், பீரங்கி, கலிபர் தாக்குதல்கள் இடம்பெற்ற வண்ணமிருந்தன. (சி)

## எழுச்சி

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

கடந்த ஜனவரியில் விடுதலைப் புலிகள் அறிவித்த ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை அரசு நம்பாமல், மீண்டும் யுத்தம் தொடர்வதாகவும் தெரிவித்துள்ளது. (சி)

## பிரயோசனமற்ற

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்ற போதும் இதுவரை எந்தவிதமானதொரு இணக்கமும் இருதரப்பிலும் எட்டப்படவில்லை.

புலிகளை விட்டு, பிரச்சனைக்கு மேற்கொள்ளப்படும் எந்தவித முயற்சியும் பயனற்றுப்போகுமென்றும் பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது. (சி)

## ஷெல், பீரங்கி

1-ம் பக்கத் தொடர்ச்சி)

யேற முற்பட்ட படையினரை பசிலன்-2000 தாக்குதலும். தீவிர எதிர்த்தாக்குதலும் பின்வாங்கி பதுங்கச்செய்துள்ளது.

இம்மோதல்களில் படையினருக்கு உதவியாகவானிலிருந்து பொம்மர், அவ்ரோ, 'வை'ரக விமானங்கள், ஹெலிகளும். கடலிலிருந்து பீரங்கிப் படகுகளும். கடற்படை முகாம், கடற்கோட்டை, ஊர்காவற்றுறை முகாம்களிலிருந்து ஷெல் கலிபர், தாக்குதலும் நடாத்தப்பட்டு வருகிறது.

இவை அனைத்தையும் முறியடித்து புலிகள் தமது தயாரிப்பு ஆயுதங்களுடன் மிகத் தீரமாகத் தாக்கி படையினரை முகாமினுள் முடக்கியுள்ளனர். (கி-56)

## வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தம் அமுலிலில்லாதபோதும் இவ்வாறு அரசுதரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பது இப்பகுதியில் சர்வஜன வாக்கெடுப்பை விரைவில் நடாத்துவதற்கே என அறியவருகிறது.

அரசு தரப்பின் இந்த அறிவிப்பு வடக்கு - கிழக்கை நிரந்தரமாக பிரிப்பதற்கானதொரு முன் ஏற்பாடே என்றும் அதானிகள் தெரிவித்துள்ளனர். (சி)

## மட்டு, வன்னியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போரதீவு நோக்கிவந்த படையினர்மீது புன்னைக்குளம் பகுதியில் புலிகள் கடும்தாக்குதலை மேற்கொண்டனர். இழப்புகளுடன் படையினர் முகாம் திரும்பினர்.

இம்மோதலில் 2வது லெப். அஜித் [ரட்ணசிங்கம் ரகுபரன் - மட்டக்களப்பு] வீரமரணமடைந்தார்.

வவுனியாவில் சுடுவந்த புலவு, பளையூர் முகாம்களிலிருந்து வெளியேறிய படையினர்மீது நேற்று புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர். சுடுவந்த புலவு முகாமிலிருந்து வந்த படையினர் மீது புளித்தரைத்த புளியங்குளம் பகுதியிலும் பளையூர் முகாமிலிருந்து வெளியேறிய படையினர்மீது மன்னார் வீதி சாளம்பன் குளத்தில் வைத்தும் புலிகள் கடும்தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதல்களினால் பலத்த இழப்புடன் படையினர் முகாம் திரும்பினர். இதன் போது 2 குண்டு வீச்சு விமானங்களும். 2 ஹெலிகளும் தாக்குதலை நடத்தின.

இம் மோதலில் வன்னியைச் சேர்ந்த வீரவேங்கை மஞ்சித் [ரமேஷ் றொபேட்] வீரமரணமடைந்தார். (வி)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number: B/100306/81.